**அனுப்புநர்**

தண்.வசுந்தராதேவி,
எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள்,
இணை இயக்குநர் (கல்வி),
புதுச்சேரி

**ந.க.எண். 331347/H1/2018** **நாள் : 27.12.2018**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள்** : மார்ச் 2019 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டோர் – +1 பயின்ற பள்ளயின் வழியாகவே தேர்வெழுத அனுமதி வழங்குதல் – சார்பு

**பார்வை** : இவ்வலுவலகக் கடிதம், ந.க.எண்.304079/எச்.எஸ்1/2018, நாள்.06.12.2018

-----

அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் கடந்த மார்ச் 2018 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கு தயாரிக்கப்பட்ட பள்ளி மாணாக்கரின் பெயர் பட்டியலினை அடிப்படையாகக் கொண்டு, மார்ச் 2019 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்விற்கு தயாரிக்கப்பட்ட பெயர் பட்டியலை பதிவிறக்கம் செய்து, பெயர்பட்டியலில் திருத்தங்கள் இருப்பின் அதன் விவரங்களையும், கூடுதலாக மாணவரது பெயரை சேர்க்கவோ அல்லது நீக்கவோ வேண்டி இருப்பின் அதன் விவரங்களையும் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாக இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யுமாறு பார்வையில் காணும் கடிதத்தில், தெரிவிக்கப்பட்டது.

அதன் பேரில் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்களின் அடிப்படையில் +1 பொதுத் தேர்விற்குபின் மாற்றுச் சான்றிதழ் பெற்று +2 பள்ளியில் பயிலாதவர்களின் எண்ணிக்கை 28,167 என தெரியவருகிறது.

அரசாணை நிலை எண்.100, பள்ளிக் கல்வித் துறை, நாள்.22.05.2017–ன்படி, மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத் தேர்வில் சில பாடங்களில் தோல்வியுறும் மாணவர்கள் ஆண்டு விரயமின்றி மேல்நிலை இரண்டாம் ஆண்டிற்கு செல்லலாம் என்றும் தோல்வியுற்ற பாடங்களை ஜுன் மாதத்தில் நடைபெறும் உடனடி சிறப்புத் தேர்விலோ அல்லது இரண்டாம் ஆண்டு இறுதித் தேர்வின் போதோ அல்லது இரண்டிலுமோ பின்னடைவுப் பாடமாக கல்லூரிகளில் உள்ளது போன்ற நடைமுறைகளில் எழுதிக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அவ்வரசாணையின்படி +1 தேர்வெழுதி தோல்வியடைந்த மாணவர்களை +2 வகுப்பில் சேர்க்காமல், +1 தேர்வில் தோல்வியடைந்த பெரும்பாலான மாணவர்களை மாற்றுச் சான்றிதழ் வழங்கி பள்ளியைவிட்டு நீக்கியுள்ளதையே, மேற்குறிப்பிட்ட மாணாக்கரின் எண்ணிக்கை மூலம் அறிய முடிகிறது.

2..

மார்ச் 2018 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வெழுதியபின் பள்ளியிலிருந்து மாற்றுச் சான்றிதழ் பெற்றுச் சென்ற தேர்வர்கள், செய்முறைத் தேர்வு இல்லாத பாடத் தொகுப்பில் பயின்ற மாணவர்களாக இருந்தால், அவர்களை தனித்தேர்வராக +2 தேர்வெழுத அனுமதிப்பதில் சிக்கல் எழாது. அதே சமயம், செய்முறைத் தேர்வு உள்ள பாடங்கள் கொண்ட பாடத்தொகுப்பில் பயின்ற மாணவர்களாக இருப்பின் அவர்களுக்கு தனித்தேர்வர்களாக செய்முறைத் தேர்வினை நடத்துவதில் சிக்கல் ஏற்படும்.

எனவே, மேற்குறிப்பிட்ட வகை மாணவர்களின் நலன் கருதி கடந்த மார்ச் 2018–ல் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வினை பள்ளி மாணாக்கராக எழுதியபின், பள்ளியில் தொடர்ந்து +2 பயிலாமல் மாற்றுச் சான்றிதழ் பெற்று பள்ளி இடைநின்ற மாணாக்கராக இருப்பினும், அவர்கள் ஏற்கனவே +1 பயின்ற பள்ளியின் மாணாக்கராகவே அவர்களை கருதி, அப்பள்ளியின் மாணாக்கர் பெயர் பட்டியலில் சேர்த்து, முதன்முறையாக மார்ச் 2019 மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வெழுதுவதற்கும், மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வில் தோல்வியுற்ற பாடங்களை எழுதுவதற்கும், செய்முறைத் தேர்வுகளையும் அதே பள்ளியில் எழுதுவதற்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட தகவலை சம்பந்தப்பட்ட மாணாக்கருக்கு 05/01/2019–க்குள் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரே தெரிவிக்க வேண்டும்.

தனித்தேர்வர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் தேர்வுக் கட்டணத்தினையே மேற்குறிப்பிட்ட மாணாக்கரிடமிருந்து பள்ளி தலைமையாசிரியர் பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

<u>**தேர்வுக் கட்டணம் விவரம் மற்றும் செலுத்தும் விதம் :**</u>

| | | |
|---|---|---|
| 1. | ஏற்கனவே மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வெழுதி தோல்வியுற்ற பாடங்களில் தேர்வெழுதும் தனித்தேர்வர்கள் | ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/– வீதம் தேர்வுக் கட்டணமும், அதனுடன் இதரக் கட்டணமாக ரூ35/–ம் செலுத்த வேண்டும். |
| 2. | மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வினை முதன் முறையாக எழுதவுள்ள தனித்தேர்வர்கள் (செய்முறைத் தேர்வு அல்லாத பாடத்தொகுப்பு) | தேர்வுக் கட்டணம் ரூ.150/–<br>இதரக் கட்டணம் ரூ.35/–<br>மொத்தம் ரூ.185/– |

மேலும் மேற்குறிப்பிட்டுள்ள வகை மாணாக்கர்களிடமிருந்து பெறவேண்டிய மாணாக்கர் வாரியாக தேர்வுக் கட்டணம் தொடர்பான அனைத்து விவரங்களும் பின்னர் தெரிவிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட அனைத்து விவரங்களையும் தங்கள் ஆளுகைக்குப்பட்ட அனைத்து மேல்நிலை தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்து, உரிய அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

**நகல்**

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்